


### கனடா தேசத்தில், இந்தியரால் துவங்கப்பட்ட

# தன்னார்வ தொண்டு நிறுவனம்

**1992** ஆம் ஆண்டில் கனடா தேசத்தில், ஒரு இந்தியரால் துவங்கப்பட்ட தன்னார்வ தொண்டு நிறுவனம் "Handicare intl". இது Toronto நகரில் மிகவும் பிரசித்தி பெற்றது. இந்த நிறுவனத்தை துவங்கியவர், இதன் தலைவரான, நம் தமிழ்நாட்டை சார்ந்த திருமதி சுலோச்சனா கிருஷ்ணமூர்த்தி அவர்கள்.

இந்நிறுவனத்தின் குறிக்கோள், தெற்காசிய நாடுகளில், குறிப்பாக தென் இந்தியாவின் கிராமங்களில் வசிக்கும் மக்களுக்கு, உடல் ஊனம், கல்வியறிவு பெறுவதற்கு ஒரு தடை ஆகாது என்ற விழிப்புணர்வு ஏற்படுத்தி, அங்கு உள்ள மாற்று திறனாளிகள் என அழைக்கப்படும், உடல், மன வளர்ச்சியில் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு, நிதி உதவி செய்து,

கலா பாஸ்கரன்

அவர்களின் கல்வி மற்றும் வாழ்க்கை தரத்தை மேம்படுத்தி, வேலை வாய்ப்புகள் அமைத்து கொடுத்து, அவர்கள் வாழ்க்கையை செம்மை படுத்துவதுதான். இதற்கான நிதி திரட்டுவதற்காக இவர் கனடாவில் ஆண்டுதோறும், விழாக்கள் நடத்தி வருகிறார். இந்த நிறுவனம் நம் தமிழ் நாட்டின் பிரபல தொண்டு நிறுவனமான அமர் சேவா சங்கத்துடன் இணைந்து செயல் படுகிறது.

சென்னையில் பிறந்த திருமதி சுலோச்சனா அவர்கள், பட்ட படிப்பு முடிந்து மேற்படிப்பிற்கு அயல் நாடு செல்வதற்கு விரும்பினார். அவர் விருப்பத்திற்கேற்ப, ஒரு வரன் அமைந்து, திருமணமாகி கணவருடன் கனடாவிற்கு 1971 ஆம் ஆண்டு வந்து, வேதியியல் மேற்படிப்பு படித்து, பணி செய்ய துவங்கினார்.

திருமதி சுலோச்சனா அவர்களுக்கு உடன் பிறந்தவர்கள் இரண்டு சகோதரிகளும், ஒரு சகோதரரும் ஆவர். இவர் சகோதரர் திரு சங்கரராமன் அவர்கள்," muscular dystrophy " எனப்படும் தசை அழிவு நோயால் தாக்கப்பட்டு உடல் வளர்ச்சி குறைந்தவர் என்றாலும், அபார மூளை வளர்ச்சி உள்ளவர். தீர்க்கதரிசியான இவர் தந்தை, தனது மகனின் அதிபுத்திசாலித்தனத்தை உணர்ந்து, காலத்தால் அழியாத கல்வி அறிவை அவன் பெற பெரிதும் பாடுபட்டார். பி காம் பட்ட படிப்பு முடிந்ததும் சி ஏ படிப்பிற்கு விண்ணப்பித்தபோது, உடல் குறைபாடு காரணமாக இவருக்கு அனுமதி மறுக்கப்பட்டது. இவர் தந்தை மனம் தளராமல், நீதிமன்றத்தை

நாடி, வெற்றி பெற்று , தன் மகளை சி.ஏ படிப்பில் சேர்த்தார். மகளும், ஒரே முயற்சியில் சி.ஏ படிப்பில் முதல் மாணாக்கராக தேர்ச்சி பெற்று, தங்க பதக்கம் பெற்றது போற்றத்தக்கது. இதன் பின் தன் போன்ற உடல் குறைபாடு உள்ளவர்களை செம்மைப்படுத்தவும், உயர்த்தவும் அமர் சேவா சங்கம் என்ற அமைப்பில் இணைந்து, இன்றளவும் அயராது உழைத்து கொண்டிருக்கிறார். இவர் சகோதரி திருமதி சுலோச்சனா அவர்களையும் இந்த அறப்பணியில் ஈடுபடுத்திய பெருமை இவருக்கு உண்டு.

திருமதி சுலோச்சனா அவர்களை இந்த பணியில் ஈடுபடுத்தும் பொழுது, பெரிய அளவில் வெற்றி பெறுவதற்கு முயற்சிகள் எடுக்க வேண்டும் என்று இவர் கேட்டுக்கொண்டதால், திருமதி சுலோச்சனா அவர்களும், தான் வேறு நாட்டில் இருந்தாலும், இதற்கான நிதி திரட்ட முனைந்து, "Handicare intl " நிறுவனத்தை துவங்கினார். தனது வேலையை ராஜினாமா செய்து விட்டு, முழு மூச்சுடன் நிதி திரட்டும் பணியில் ஈடுபட்டு, ஒரு வருடத்திற்குள், அமர் சேவா சங்கத்தில், இவர்கள் அளித்த நிதி உதவியுடன், மாற்று திறனாளிகள் புனர்வாழ்வு மையம் கட்டப்பட்டு, துவங்கப்பட்டது. இந்த பணியில் இவர் கணவர் இவருக்கு துணையாக இருந்து முழு ஆதரவு அளித்தார்.

இவ்வாறு துவங்கிய இந்த நிறுவனத்தின் சேவை, மகத்தான அளவில் விரிந்து, தற்போது அமர் சேவா சங்கத்தில் சுமார் நான்கு மையங்கள் / கட்டிடங்கள் உள்ளன. இங்கு 550 மாணவர்கள் கொண்ட ஒரு தரமான உயர்நிலை பள்ளி உள்ளது. இதில் சுமார் இருபது சதவிகிதம் உடல் வளர்ச்சி பாதிக்கப்பட்ட மாற்று திறனாளிகள்.

இது தவிர, ஊனமுற்ற குழந்தைகளுக்கு orthotics எனப்படும் உபகரணங்கள் அளித்து, போலியோ நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு, நடை திருத்துவதற்கு அறுவை சிகிச்சை அளித்து அவர்கள் இயல்பு வாழ்கை வாழ்வதற்கு அனைத்து உதவிகளும் இலவசமாக அளிக்கப்படுகின்றன. மேலும் பிசியோதெரபி, ஆக்குபேஷனல் தெரபி, வொகேஷனல் ட்ரைனிங் ஆகிய பிரிவுகள் திறம்பட செயல் படுகின்றன.

உடல் ஊனமுற்றோருக்கு கல்வியறிவு கொடுப்பதோடு நின்றுவிடாமல், வேலை வாய்ப்பும் பெற்று கொடுத்து, அவர்களை சிறந்த குடிமக்களாக உயர்த்த அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ள படுகின்றன. இவை அனைத்தும், திருமதி சுலோச்சனா அவர்களின் சகோதரி செல்வி சுமதி அவர்களின் தரமான ஆலோசனை மற்றும் மேற்பார்வையில் நடத்தப்பட்டன.. இவரும் தன் சகோதரரை போல "muscular dystrophy " யால் பாதிக்கப்பட்டவர். இவர் இங்கு படித்த மாணவர்களுக்கு இந்திரா காந்தி திறந்த பல்கலைக்கழகத்தில் பட்ட மேற்படிப்பு பல துறைகளிலும் படிக்க வைத்து, 100 % வேலை வாய்ப்பு பெற்று தந்தவர் . இதுவரை சுமார் 750 பேர் இந்த திட்டத்தின் மூலம் பயனடைந்து, இந்தியாவில் பல இடங்களில் பணி செய்கிறார்கள். பட்ட படிப்பு தொடர இயலாதவர்களுக்கு கை வேலைகள் கற்று தர படுகின்றன.

2006 ஆம் ஆண்டில் மன வளர்ச்சி குறைந்த குழந்தைகளுக்காக, சிறப்பு பயிற்சி பெற்ற ஆசிரியர்களை கொண்டு ஒரு பள்ளி துவங்க பட்டது. இந்த பள்ளியில் தற்போது இருநூறுக்கும் மேற்பட்ட பிள்ளைகள் படித்து கொண்டிருக்கிறார்கள். ஆறு வயதிற்கு மேற்பட்டவர்கள் இந்த பள்ளியில் சேர்த்து கொள்ளப்படுகிறார்கள்.



இந்த குறைபாட்டை குழந்தை பிறந்த சில மாதங்களிலேயே கண்டு பிடித்துவிட்டால், அதை குணப்படுத்துவது எளிது என்பதால், அதற்கான மையத்தையும் மருத்துவ வசதிகளுடன் 2013 ஆம் ஆண்டு துவங்கினர். இதற்கு தேவை அதிகமாக உள்ளதால் பத்து மையங்களில் ஆறு வயதிற்கு உட்பட்ட 750 குழந்தைகள் சேர்க்கப்பட்டுள்ளனர். இதற்கான நிதி திரட்டுவதில் தற்போது இந்த நிறுவனம் ஈடுபட்டுள்ளது. இந்த நிறுவனத்திற்கு கனடா அரசின் நிதி உதவியும் கிடைக்கிறது.

மேலும் இந்த நிறுவனம் அமர் சேவா சங்கம் தவிர மற்ற தொண்டு நிறுவனங்களுக்கும் உதவிக்கரம் நீட்டுகிறது. இந்த நிறுவனத்தின் உதவியுடன் தென்னிந்தியாவில் சுமார் 800 கிராமங்களில் உள்ள மக்கள் பயனடைந்துள்ளார்கள் என்பது மிகவும் பாராட்டுக்குரியது.

**வலைத்தளம்:**
handicareintl.org / www.amarseva.org